**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: நாராயணசாமி**

**தேதி: 01.10.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

மகாநவமி பண்டிகையை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் துர்கா பூஜை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டின் ஒற்றுமைக்கும், கலாச்சார பாதுகாப்பிற்கும் ஆர்எஸ்எஸ் அமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜிஎஸ்டி சீர்திருத்தம், பாதுகாப்புத் துறையில் கொள்முதல்களில், நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

*மகாநவமி* (9)

மகாநவமி பண்டிகையை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த நவராத்திர விழா அனைவரது வாழ்விலும், வளம், வெற்றி, செழிப்பை கொண்டு வரட்டும் என்று அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நவராத்திரி விழா தேசத்தின் பரிமாணத்தை ஏற்றம் மிக்கதாய் எடுத்து செல்வதற்கு கல்வி, தொழில் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்றத்தை உருவாக்கி அனைத்து நன்மைகளும் மக்கள் அனைவருக்கும் வந்து சேரட்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தமது சமூக ஊடகப்பதிவில், மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*துர்காபூஜை* (16)

பீகாரில் துர்கா பூஜை கொண்டாட்டங்கள் சிறப்பு பிராத்தனைகள் மற்றும் கன்னியா பூஜைகள் மூலம் கொண்டாடப் பட்டு வருகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஏராளமான பக்தர்கள் கைமூர், முங்கர், மற்றும் கோபால் கஞ்ச் உள்ளிட்ட சக்தி பீடங்களில் வழிபாடு செய்து வருகின்றனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பந்தல்கள் அமைக்கப்பட்டு, துர்காபூஜையின் முக்கியத்துவம் குறித்து காட்சிபடுத்தப்பட்டன.

ஜார்கண்ட் மாநிலத்தில் துர்கா பூஜை மிகுந்த உற்சாகத்துடனும், பக்தியுடனும் கொண்டாடப் பட்டு வருகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பூஜை பந்தல்களில் பாரம்பரிய சடங்குகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நவராத்திரி பண்டிகையின் 9 ஆம் நாளான இன்று ஆயுதபூஜை மற்றும் சரஸ்வதி பூஜை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. தொழிலுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் குழந்தைகளின் கல்வி சிறக்க பாடபுத்தகங்கள், எழுதுபொருட்கள் ஆகியவற்றை வழிபாடு செய்து மக்கள் கொண்டாடினர்.

*சேவா சப்தாஹ்- ஜி 20* 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. ஜி 20 வெற்றி குறித்து, **சேவைத் திருவிழா** என்னும், இந்த **சிறப்பு தொடரில்** காண்போம்.

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்- ஜி 20* 2 (16)

ஜி-20 வெற்றியின் மூலம் இந்தியா உலகளாவிய தலைமையை வலுப்படுத்தி உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் இந்தியா ஜி-20 மாநாட்டிற்கு தலைமை தாங்கியதை தொடர்ந்து, ஆப்பிரிக்க ஒன்றியத்தின் உறுப்பினர் மற்றும் உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியை தொடங்குவது உள்ளிட்ட உறுதியான செயல்பாடுகளில் முன்னேற்றம் கண்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தியாவின் நாகரீக நெறிமுறைகளையும், உலகளாவிய ஒத்துழைப்பிற்கான பங்களிப்பையும் பிரதிபலித்து நம்பகமான வர்த்தகம் மற்றும் கொள்கை ஒத்துழைப்பு ஆகியவற்றில் உயர் முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளது. 20 உறுப்பு நாடுகளும் இதில் கையெழுத்திட்டதால் இந்த வெற்றி சாத்தியமானது. மேலும், ஆப்பிரிக்க ஒன்றியத்தை, ஜி-20 ன் நிரந்தர உறுப்பினராக சேர்த்தது, உலக மக்கள் தொகையில் 80 சதவிகிதத்தை உள்ளடக்கி விரிவுபடுத்தி உள்ளது. இந்தியாவின் தலைமைத்துவம் மூலம் அனைத்து சிறிய நாடுகளுக்கும் ஒரு மகத்தான தளமாக ஜி-20 வெற்றி அமைந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறுகையில்.........

**(வாய்ஸ் பிரதமர்)**

*சேவா சப்தாஹ்- ஜி 20* 3 (14)

நாடு முழுவதும் பொதுக் கூட்டங்களை நடத்தி, இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை உலகிற்கு எடுத்துக் காட்டியதில் ஜி-20 மாநாடு முக்கிய பங்கு வகிக்கிறது. வரலாற்று சிறப்பு மிக்க இடங்களில் நடைபெற்ற இந்த கலாச்சார நிகழ்ச்சிகள் நாட்டின் பல்வேறு மரபுகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகிய இரண்டும் அடையாளமாக கொண்டு இந்தியா வலுப்பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. இந்தியாவின் பண்முக நட்புறவில் தேச நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதோடு பிரிக்ஸ், குவாட், ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகள் உடனான ஒருங்கிணைப்பால் பாதுகாப்பு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் தீவிரவாத த்திற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தியாவின் செயல்பாடுகள் முக்கியத்துவம் பெறுகிறது. பிரதமரின் வெளிநாட்டு பயணங்கள்

இந்தியாவை உலகளவில முன்னோடி நாடாக நிலை நிறுத்தியதோடு பிற நாடுகள் உடனான ஒத்துழைப்பால் சர்வதேச பிரச்சனைகளில் பிரதமரின் கருத்துக்கள் இன்றியமையாத பங்கை வகிக்கிறது.

*ஆர்எஸ்எஸ்* (11)

நாட்டின் ஒற்றுமைக்கும், கலாச்சார பாதுகாப்பிற்கும் ஆர்எஸ்எஸ் அமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற இந்த அமைப்பின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர், ஆர்எஸ்எஸ் தொண்டர்கள் தேச நலனுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் அயராது பணியாற்றி வருவதாக கூறினார். மேலும், ஆர்எஸ்எஸ் அமைப்பின் பங்களிப்பை குறிக்கும் வகையில் தபால் தலையையும், நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

இவ்விழாவில் உரையாற்றிய மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் செகாவத், மக்களிடையே தேச பற்று மற்றும் கலாச்சார விழிப்புணர்வு, சமூக வளர்ச்சி ஆகியவற்றில் ஆர்எஸ்எஸ் தொண்டர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்.

*ராஜ்நாத் சிங்* (11)

ஜிஎஸ்டி விகித நிர்ணயம் செய்வது பாதுகாப்புத் துறையில் கொள்முதல்களில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று, புதுடெல்லியில் நடைபெற்ற பாதுகாப்பு கணக்குத் துறை தினம் 2025 ல் உரையாற்றிய அவர், பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு சார்ந்த தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க நாட்டில் ஒரு புதுமையான சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குவது குறித்து வலியுறுத்தினார். பாதுகாப்பு துறையின் நிதி அறிக்கையில் கணக்குத் துறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்குவது,

ஓய்வூதியதாரர்களின்  நலத்திட்டங்கள், போர் தயார் நிலை ஆகியவற்றில் இந்த துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜிஎஸ்டி- கைவினை 1  (8)

நாட்டில் தற்போது அமலாகி வரும்,  அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இதுவரை 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5 சதவிகிதம், 18 சதவிகிதம் என, 2 அடுக்குகளாக குறைக்கப் பட்டுள்ளது.  கைவினைப் பொருட்களில் வரி விகித சீர்திருத்தத்தின் மூலம், குடிமக்களுக்கு கிடைக்கும் பயன்கள் ஏராளம். அது குறித்த ஒரு செய்தி தொகுப்பு….

**(வாய்ஸ்)**

ஜிஎஸ்டி- கைவினை 2  (17)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், வர்த்தகர்கள், கைவினை கலைஞர்கள் மற்றும் நுகர்வோர் மீதான நிதிச் சுமையைக் குறைக்க மத்திய அரசு கைவினை பொருட்கள் துறையில் குறிப்பிடத் தக்க வரிக் குறைப்புகளை அறிமுகப்படுத்தி உள்ளது. பீங்கான் பானைகள் மற்றும் ஜாடிகள், டெரக்கோட்டா  கைவினை பொருட்கள், பாத்திரங்கள் ஆகிய அன்றாடம் பயன் படுத்தப்படும் பொருட்களுக்கு தற்போது 5 சதவிகித வரி மட்டுமே விதிக்கப் படுகிறது. இதற்கு முன்பு 12 சதவிகிதமாக இருந்த இந்த வரி தற்போது குறைந்துள்ளதால் வீட்டு செலவுகள், மற்றும், அத்தியாவசிய பொருட்களின் விலை மலிவாகி உள்ளது. மேலும், இத்துறையில் சிலைகள், நீல மட்பாண்டங்கள் மற்றும் அலங்கார மட்பாண்டங்கள் மீதான வரி விகிதம் 12 லிருந்து, 5 ஆக குறைக்கப் பட்டுள்ளது கலைவினை கலைஞர்கள் மற்றும் பாரம்பரிய கைவினை சந்தைகளுக்கு ஊக்கம் அளித்துள்ளது. இதன் காரணமாக இந்தியாவில் கையால் செய்யப்பட்ட கண்ணாடி வேலைப்பாடுகள் நிறைந்த

கைவினைப் பொருட்கள் நுகர்வோருக்கு எளிதாக கிடைக்க கூடியதாக அமைந்துள்ளது. இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தம் குடும்பங்கள் மீதான நிதிச் சுமையை குறைத்து, இந்தியாவின் வளமான கைவினை பொருட்களுக்கான தேவைகளையும் வலுப்படுத்துகிறது.

கலால் (9)

புதுச்சேரியில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நாளை மதுக்கடைகளை அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக கலால் துறை துணை ஆணையர் திரு ராஜேஷ் கண்ணா செய்திக்குறிப்பு வெளியிட்டுள்ளார். புதுச்சேரி, காரைக்கால், மாகே மற்றும் ஏனாம் பகுதிகளில் இயங்கி வரும் அனைத்து கள், சாராயம், பார் உட்பட அனைத்து வகை மதுக்கடைகளும், மது அருந்த அனுமதிக்கப்பட்ட உணவகங்களில் உள்ள பார்களும் மூடப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார். இதனை மீறுபவர்கள் மீது கலால் துறை கடும் நடவடிக்கையை எடுக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஆர்பிஐ(11)

இந்திய ரிசர்வ் வங்கி நடப்பு நிதியாண்டிற்கான அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மதிப்பீடுகளை 6.8 சதவிகிதமாக மாற்றி அமைத்துள்ளது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்திய ரிசர்வ் வங்கி 2025-26 ஆம் நிதியாண்டிற்கான பணவீக்கம் 2.6 சதவிகிதமாக இருக்கும் என்று கணித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் 4 ஆவது இருமாத கொள்கையை இன்று மும்பையில் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்கோத்ரா அறிவிப்பு வெளியிட்டார். இதன்படி, ரெப்கோ வட்டி விகிதம் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து 5.5 சதவிகிதமாக வைத்திருக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். ஜிஎஸ்டி சீர்திருத்தம், நுகர்வோர் விலை குறியீட்டில் உள்ள பல பொருட்களின் விலைகளை குறைக்க வழிவகை செய்யும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வானிலை (13)

மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, இன்று காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளது. இது அடுத்த 12 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், இதன் காரணமாக தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே, தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் வட தமிழக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்க கடல் பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டி உள்ள குமரி பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.